ஓம் ஆறுமுக அரங்கமகா தேசிகாய நம

**4. செயல்பாடுகளுக்கு மீறி அதிகமாக இருக்கும் வாகனங்களை என்ன செய்ய வேண்டுமென்ற அறிவுரை ஆசியும் வேண்டுகிறோம்.**

**ஓங்காரக்குடிலாசான் தவத்திரு ஆறுமுக அரங்கமகா தேசிகர் அருட்சுவடி**

**23.05.2024**

1. தர்மபலம் கொண்ட ஓங்கார சபையில்
தண்டாயுதன் பெருந்துணையோடு
அரங்கன் யான் நிறுவியுள்ளேன்
பெருமைமிக்க ஓங்காரக்குடிலின் அன்னதானம்

2. பிசகின்றி உலகெல்லாம் பரவி நிற்கும்
இன்பமுற ஓங்காரக்குடிலின் நிர்வாகம்
உலகே வியக்கின்ற சிறந்த நிர்வாகமாகும்
அவ்வாறு அன்னதான பணிக்கு

3. அளவில்லா தொண்டர் படையோடு
ஆக்கமுடன் வாகனங்களும் அளவில்லா
சேர்த்து ஆற்றல்பட சேவையாற்றிய
பெருஞ்சபை இந்த பிரணவக்குடில்

4. குடிலிலே இது காலம் அரங்கன் யான்
சரவண ஜோதி கலந்து
ஆற்றல்பட சூட்சுமமாய் இயங்க
இந்தவித காலம் ஓங்காரக்குடிலின்

5. செயல்பாடுகளுக்கு மேலே இருக்கக் கூடிய
வாகனங்கள் சார்ந்த வழிகாட்டலில்
அச்சமற இதுகாலம் அரங்கன் யான்
ஆசி உரைப்பேன் மெச்சவே

6. ஓங்காரக்குடிலின் தர்மத்திற்கு
உயர்வாக தேவைக்கு ஏற்ற
வாகனங்களை நிர்வாகத்தின்
செயல்பாடுகளுக்கு பயன்படுத்திக் கொண்டு

7. உப வாகனங்களை பிறவகையில்
மாற்றம் செய்வதே நலமாகும்

சில காலம் பின்னே தேவைக்கேற்றவாறு
புதிய வாகனங்களும் தர்மப் பணிக்கு உண்டான

8. அதீத வளர்ச்சிக்கு உண்டான
வாகன தேவைகள் வசதிகளை
அரங்கன் யான் அது காலம்
உருவாக்கி அருள்வேன் அன்னதனால் இதுகாலம்

9. நிர்வாக நலன் குறித்து அச்சம் கொள்ளா
வாகனங்களின் எண்ணிக்கையை குறைத்து
மற்ற வகையில் செயல்படுத்துவது
பொருளாதார வளமும் பொருட்செலவு

10. பிற வகை குறைக்கும் செயல்பாடாகவும் மாறும்
அன்னதனால் அரங்கன் யான்
ஆணையிட்டேன் அன்பர்கட்கு
அச்சம் கொள்ளா இந்தவித முடிவுகள் எடுத்து

11. அதுசார்ந்த பணியில் இருக்கும் அன்பர்கட்கும்
ஆதரவான சூழலை உருவாக்கி அன்பர்கள்
அரங்கன் என் உத்தரவாய் செயல்படுத்த அனைத்திலும் பாதுகாப்பாய்
நின்று நான் அருள்புரிவேன் ஆசி விளக்கம் முற்றே.

–சுபம்–